நாள் 20.08.2024

அசல் வழக்கு எண் 9/2021

வா சா 2 அரங்கநாதன்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

வழக்கு தபசில் சொத்து பெரும்பத்து ஊரில் உள்ளது என்றால் சரிதான். பெரும்பத்து ஊரில் ரயில்வே தண்டவாளம் எதுவுமில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கும், வழக்கு தயார் செய்வதற்குமான விவரங்களை பெரும்பத்து ஊரை சார்ந்த ஆனந்தராஜ் மற்றும் காமராஜ் தான் சொன்னார்களா என்றால் இல்லை நான் தான் எனது அம்மாவை என்னுடன் அழைத்து வருவேன். பொன்னம்மாள் நல்லசிவன்பிள்ளை குருபூஜை சமாதி தர்மம் அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்து என்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் அறக்கட்டளை கிடையாது. சமாது குருபூஜை. அதற்கு அறக்கட்டளை உள்ளதா என்றால் கிடையாது. நான் தாக்கல் செய்துள்ள வாசா.ஆ.1 ரசீதுகள் பொன்னம்மாள் நல்லசிவன்பிள்ளை குருபூஜை சமாதி தர்மம் அறக்கட்டளைக்காக வேண்டி வழங்கப்பட்ட ரசீதுகள் என்று சொன்னால் இல்லை பஞ்சாயத்தில் இருந்து வழங்கப்பட்டவை. நான் சொல்லும் வா.சா.ஆ.1 ரசீதுகளில் சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பட்டா சேரன்மகாதேவி கோட்டாடசியர் அலுவலகத்தில் பிரதிவாதி கொடுத்த மனுவின் பெயரில் ரத்து செய்யப்படடது என்றால அது எனக்கு தெரியாது. அந்த ரத்து நடவடிக்கைக்கு மேல் மாவட்ட வருவாய் அலுவலரிடம் நாங்கள் தாக்கல் செய்த மேல்முறையீடும் தள்ளுபடியாகிவிட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.3 சொத்து வரி ரசீதில் பொன்னம்மாள் நல்லசிவன்பிள்ளை குருபூஜை சமாதி தர்மம் அறக்கட்டளை

ரசீது என்று தான் கண்டுள்ளது என்றால்சரிதான். எனது தாயார் சரோஜீனி அம்மாள் பெயரில் குத்தகை பத்திரமோ அலலது வேறு எந்த ஆவணமோ இலலை என்று சொன்னால் சரியல்ல இருக்கிறது. அவ்வாறு ஆவணம் உள்ளதாக நான் நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல்செய்யவில்லை என்று சொன்னால்சரியாக தெரியவில்லை. மேற்படி அறக்கட்டளையில் யார் யார் நிர்வாகி என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியவில்லை. பிரதிவாதியின் எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் எதிருரை விவரங்கள் பொய் என்று சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில என்ன விவரம் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது தாத்தா பெயரில் வழகசு தபசில் சொத்திற்கு குத்தகை ஆவணம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அறக்கட்டளையிலிருந்து எனது தாத்தா பனை மரங்களை மட்டும் குத்தகைக்கு எடுத்து அனுபவம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. உடைமரங்களையும் நாங்கள் தான் வெட்டி கோயிலையும், சமாதியையும் பராமரித்து வருகிறோம். பிரதிவாதியின் மீது தனிப்பட்ட முறையில் தான் வழக்கு போடப்பட்டுள்ளது என்றும், அறக்கட்டளையின் நிர்வாகி என்ற முறையில்வழக்கு தாக்கல்செயயவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. அவர் நிர்வாகியாக வந்ததால் தான் அவரை தெரியும், அறக்கட்டளை உள்ளது தெரியாது. வெள்ளையாநாடார் உடன்பிறந்தவர் பண்டார நாடார் என்றால் சரிதான். வெள்ளையாநாடாருக்கு எனது தகப்பனார் ஏகநாராயணன் தவிர பத்மநாபன் என்று மற்றொரு சகோதரரும் உண்டு என்று சொன்னால் சரிதான். பத்மநாபனின் வாரிசுகள் இவ்வழககில் கட்சிகளாக

சேர்ககப்படவில்லைஎன்றால் சரிதான் அவர்கள் சின்னவயதிலேயே ஒப்படைத்துவிட்டு உசிலம்பட்டிக்கு சென்றுவிட்டார்கள். வழகககு தபசில் சொததில் பயிர் எதுவுமில்லை என்றால் சரிதான் பனையும் உடைமரங்களும் தான் உள்ளது. எனது தாயாரின் ன்ஸியல் ஏ சரோஜினி என்றால் சரிதான். நான் தாக்கல்செய்துள்ள வா.சா-ஆ.3 தீர்வை ரசீதுகள் அனைத்திலும் யா சரோஜினி என்று தான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏ-க்கான நெடில் யா போட்டுள்ளார்கள். நான் வழகக்றிக்ாக பொய்யாக சொல்லுகிறேன் என்றும் வா.சா.ஆ.3 ரசீதிற்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் வழக்கு பிராதிலும் வெள்ளையா நாடாருக்கும், பண்டாரநாடாருககும் சேர்ந்து குத்தகை கொடுத்துள்ளதாக தான் சொல்லியுள்ளோம் என்றால் இல்லை. வெள்ளையாநாடாருககு மட்டும் தான் குத்தகைக்கு கொடுத்துள்ளாகள். எங்கள் வழக்குப்படி குத்தகை காலமானது 3 ஆண்டுகள். 1923 லிருந்து 3 ஆண்டுகள் என்று சொன்னால் இல்லை. வழக்கு சொத்திற்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமில்லை என்றும் ஒருகாலமும் வழக்கு சொத்தை நான் அனுபவம் செய்ததில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்து என்பதால் அறக்கட்டளையின் நிர்வாகி என்ற முறையில் பிரதிவாதியை கட்சி சேர்க்காததால் எங்களுடைய வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் எந்த வருடம் இறந்தார் என்றால் 1986 ல் இறந்தார்கள். நாங்கள் அறக்கட்டளைக்கு தெரியாமலேயே மோசடியாக பட்டாவும், ரசீதும் உற்பத்தி செய்துள்ளோம் என்றால்சரியல்ல. பிரதிவாதி எங்கள் தாயார் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அந்த புகாரின் பெயரில் விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான்.

அவர்கள் நீதிமன்றத்தை நாட சொன்னார்கள். காவல்நிலையத்திலும் சேரன்மகாதேவி ஆட்சியரிடம் எங்கள் மீது புகார் கொடுத்தால் விசாரணையிலிருந்து தப்பிப்பதற்காக நாங்கள் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1925 லேயே முடிந்து போன குத்தகையினை வைத்து ரியல் எஸ்டேட் தொழில் புரியும் ஆனந்தராஜ் மற்றும் காமராஜ் தூண்டுதலின் பேரில் நாங்கள் வழக்கை தாக்கல் செய்துள்ளோன் என்றால் சரியல்ல. ஆனந்தராஜ், காமராஜ் எங்கள் ஊரை சார்ந்த நபர்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவர் பெயரிலும் வெவ்வேறு சிவில் கிரிமினல் வழக்குகள் உள்ளது என்றால்எனக்கு தெரியாது.